# பாடம் 52: அறநெறி வாழ்வு

**முந்திய பாடத்தில் இருந்து மீள்பார்வை:**
முந்திய பாடங்களின் ஊடாக, தூய கத்தோலிக்கத் திருச்சபையின் மிக அடிப்படையான படிப்பினைகளை நமது புனித மறைநூல் மற்றும் புனித மரபில் இருந்து நீங்கள் கற்றுக் கொண்டீர்கள். எனினும், திருச்சபையின் இந்த எல்லா படிப்பினைகளும் தனிப்பட்ட விதத்தில் வாழ்வின் வழியாக நடைமுறையாக்கப்பட வேண்டும். கடவுளும் அவரது திருச்சபையும் நாம் வாழத் தேர்ந்தெடுக்கும் விதத்தில் தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும். இதன் காரணமாகவே அறநெறி வாழ்வை வாழ்வது முக்கியமாக இருக்கிறது. ஆகவே, திருச்சபையின் படிப்பினைகள் அடிப்படையில் அறநெறி வாழ்வு வாழ்வது கத்தோலிக்க விசுவாசம் என்ற அதே நாணயத்தின் மற்றொரு பக்கமாக இருக்கிறது. மற்றச் சொற்களில், நாம் நம்புவதை நாம் வாழ வேண்டும். அடுத்த சில பாடங்களில், திருச்சபையின் அறநெறி படிப்பினைகள் குறித்து மிக விரிவாக நீங்கள் கற்பீர்கள். இந்த பாடத்தில், கத்தோலிக்க அறநெறி படிப்பினைகள் எல்லாவற்றுக்கும் அடிப்படையாக உள்ள சில கொள்கைகள் உங்களுக்கு அறிமுகம் செய்யப்படுகின்றன.

**தற்போதைய பாடம்:**
1. யோவான் 10:10ல் இயேசு கூறுகிறார், ‘‘அவர்கள் வாழ்வு பெறவும், அதை நிறைவாகப் பெறவும் நான் வந்துள்ளேன்’’. கிறிஸ்தவ விசுவாசம் என்பது வெறுமனே திருச்சபைக்குள் ‘‘அலுவல்பூர்வமாக ஏற்கப்பட’’ திருமுழுக்கு அருளடையாளம் பெறுவதை விட மேலானது. கடவுள் புண்படுவாரோ என்ற அச்சத்தில் விதிகளின் ஒரு தொகுப்பைக் கடைபிடிப்பதை விடவும் அது மேலானது. கிறிஸ்துவில் நமது விசுவாசமும், நாம் பெறுகின்ற திருமுழுக்கும் நமக்கு அவரில் புது வாழ்வைத் தருகின்றன. இந்த வாழ்வு நிறைவானதாகவும் மிகுதியாகவும் இருக்க வேண்டுமென அவர் விரும்புகிறார். கிறிஸ்துவில் நாம் பெறுகின்ற இந்த மிகுதியான வாழ்வுக்கு அவரது அன்பிலும் ஒளியிலும் வாழ்தல் என்பது பொருள். மற்றச் சொற்களில், நேர்மையானதும் சரியானதுமான ஒரு வாழ்வை, அறநெறியுள்ள ஒரு வாழ்வை வாழ்தலை அது கொண்டுள்ளது.

*கதிம 1691*: ‘‘கிறிஸ்தவரே, கடவுளின் சொந்த இயல்பில் நீங்கள் பங்கு கொள்கின்ற உங்கள் மாண்பைக் கண்டுணருங்கள், பாவத்தின் விளைவான உங்களது முந்திய நிலைக்குத் திரும்பி விடாதீர்கள். யார் உங்களது தலை மற்றும் நீங்கள் யாருடைய உடலில் உறுப்பாய் இருக்கிறீர்கள் என்பதை நினைவுகூருங்கள். நீங்கள் இருளின் வல்லமையில் இருந்து மீட்கப் பெற்று, கடவுளது அரசின் ஒளிக்குள் கொணரப்பட்டுள்ளீர்கள் என்பதை ஒருபோதும் மறவாதீர்கள்.’’

2. கிறிஸ்தவர்களாக அறநெறி வாழ்வு வாழ்தல் என்பதற்கு நமது மீட்பரான இயேசு கிறிஸ்துவிடம் இருந்து மிகுதியான கொடைகளைப் பெற்றுள்ள மக்களாக நமது மாண்பை நாம் கண்டுணர்வதாகும். நாம் எப்பொழுதும் கடைபிடிக்க வேண்டிய மிக முக்கியமான சில கொள்கைகள் அடிப்படையில் இந்த அறநெறி வாழ்வு இருக்கிறது. திருச்சபையின் எல்லா அறநெறி படிப்பினைகளும் இந்த கொள்கைளில் இருந்தே வெளிவருகின்றன.

திருச்சபையின் வெவ்வேறு அறநெறி இறையியலார்களால் இந்த கொள்கைகள் வேறுபட்ட விதத்தில் விவரிக்க அல்லது பட்டியலிடப் பெறுகின்றன. எனினும், அவை எல்லாம் இறுதியாக கடவுள், மனிதகுலம், மற்றும் படைப்பில் எஞ்சியவை குறித்த திருச்சபையின் மனதைக் காட்டும் அதே கொள்கைகளை வேறுபட்ட வழிகளில் வெளிப்படுத்துகிறவை ஆகும்.

3. **அன்பின் முதன்மை**. இயேசு தாமே இந்த கொள்கையை மிகத் தெளிவாக புனித மறைநூலில் கற்பித்துள்ளார்:
*மத்தேயு 22:37-40*: ‘‘உன் ஆண்டவராகிய கடவுளிடம் உன் முழு இதயத்தோடும், உன் முழு ஆன்மாவோடும், உன் முழு மனத்தோடும் அன்பு செலுத்து. இதுவே தலைசிறந்த முதல் கட்டளை. அதற்கு இணையான இரண்டாவது: உன்னைப் போல் உனக்கு அடுத்திருப்பரிடமும் அன்பு செலுத்து. திருச்சட்டம் முழுவதும் இறைவாக்கினர்களும் இந்த இரு கட்டளைகளையே பற்றிக் கொண்டுள்ளன.’’

கடவுளை அன்பு செய்வதும், நமக்கு அடுத்திருப்பவரை அன்பு செய்வதும் நமது அறநெறி சட்டங்கள் அனைத்தின் சாரமாக இருக்கிறது. மோசேக்கு கடவுள் வழங்கிய பத்துக் கட்டளைகள் மற்றும் இஸ்ரயேலின் இறைவாக்கினர்கள் எல்லாரின் படிப்பினைகள், மற்றும்

இஸ்ரயேலர்கள் தங்கள் வரலாற்றில் கடைபிடித்திருக்க வேண்டிய எல்லா சட்டங்களிலும் காணப்படுகிறவற்றை இது உள்ளடக்கியுள்ளது. இது தூய கத்தோலிக்க திருச்சபையின் இன்றைய அறநெறி படிப்பினைகள் எல்லாவற்றையும் கூட உள்ளடக்கியுள்ளது.

4. சான்றுப்பூர்வமாக, நாம் கடவுளை அன்பு செய்கிறோம் மற்றும் நமக்கு அடுத்துள்ளவர்களை அன்பு செய்கிறோம் என்று கூறும் உதட்டுச் சேவை போதுமானதன்று. இந்த அன்பை வெளிக்காட்டும் வாழ்வின் வழியோடு இணைந்ததாகவும் இந்த உதட்டுச் சேவை இருக்க வேண்டும்.

பல கத்தோலிக்கர்கள் அடிக்கடி தங்களைப் பாவம் செய்வதில் இருந்து தடுக்க அவர்கள் கடைபிடிக்க வேண்டிய ''குறைந்தளவில்'' கவனம் செலுத்துகின்றனர். உண்மையில், ஒரு கத்தோலிக்கர் கடைபிடிக்க வேண்டியதில் ''குறைந்தளவு'' பற்றி திருச்சபை நிபந்தனைகள் கொண்டிருக்கவில்லை, மேலும் இவை எல்லாம் திருச்சபையின் அறநெறி விதியில் காணப்படுகின்றன. எனினும், நற்செய்தியின் அழைப்பானது நாம் என்றென்றும் குறைந்தளவைக் கடைபிடிக்க முயல்வதற்கானது அன்று, அதனால் நாம் இவ்விதியைக் கடந்துபோக இயலாது. உண்மையில் நாம் கடவுளையும் நமக்கு அடுத்துள்ளவரையும் அன்பு செய்ய நாடினால், இந்த அறநெறி கொள்கைகளை நம் இதயங்களிலும் மனங்களிலும் மற்றும் நமது அன்றாடச் செயல்களிலும் வாழச் செய்வதற்கு நமது சிறந்ததைக் கொடுப்பதில் நமது கவனம் இருக்க வேண்டும். அறநெறி வாழ்வின் கருத்து மேலானது, வெறும் குறைந்தளவு அன்று. விண்ணக வாழ்வானது மேலான வாழ்வு என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

5. அன்பின் சட்டத்தைத் தியானிப்பதில், நமது வாழ்வின் மிக நேர்த்தியான விதியாக நமது இயல்திறனின் சிறந்த விதத்தில் பேறுகளை (மத் 5:1-12) எப்பொழுதும் கடைபிடிக்கிறதாகும். பேறுகளை நாம் நடைமுறையாக்க நாடும் பொழுது, கடவுளை அன்பு செய்யவும் நமக்கு அடுத்துள்ளவரை அன்பு செய்யவும் நாம் உண்மையில் நேர்த்தியாக முயல்கிறோம். பேறுகள் என்பவை வெறுமனே அழகியத் தத்துவங்களின் தொகுப்பல்ல என்பதை நினைவில் கொள்ளுங்கள். ''பேறுகள் என்பவை இயேசுவின் போதனையின் இதயமாக இருக்கின்றன'' (கதிம 1716) என்று *கத்தோலிக்கத் திருச்சபையின் மறைக்கல்வி* நமக்கு கூறுகிறது. அவை அறநெறி தரநிலைகளின் ஒரு புதிய தொகுப்பை வழங்குகின்றன, அவற்றால் இயேசுவின் சீடர்கள் என்ற அடிப்படையில் நற்செய்தி வாழ்வை வாழ நாம் அழைக்கப்படுகிறோம். பேறுகளின் புண்ணியங்களை வாழ்வது என்பது கிறிஸ்துவைப் போன்றே வாழ்தலாகும்.

6. **வாழ்வின் புனிதம்**. எல்லா மனிதர்களின் படைப்பாளராக கடவுள் இருக்கிறார் மற்றும் நீக்க முடியாத ஒரு மாண்பை ஒவ்வொரு மனித வாழ்வுக்கும் வழங்கியுள்ளார், ஆகவே ஒருவர் பிறந்துள்ளாரா அல்லது இல்லையா, ஒருவர் இளவயதினரா அல்லது முதிர்வயதினரா, ஒருவர் திறனுள்ளவரா அல்லது திறனற்றவரா என்ற ஒப்பிடலின்றி ஒவ்வொரு மனிதரும் கடவுளுக்கு மதிப்புக்குரியவர்.

*கதிம 2258*: ''மனித வாழ்வு புனிதமானது, ஏனெனில் அதன் தொடக்கம் முதல் கடவுளின் படைப்பு செயலை அது உள்ளடக்கியுள்ளது, மேலும் தனது ஒரே முடிவான படைப்பாளருடன் என்றென்றும் அது சிறப்பு உறவில் இருக்கிறது. கடவுள் மட்டுமே வாழ்வின் ஆண்டவராக அதன் தொடக்கம் முதல் முடிவு வரை இருக்கின்றார்: எவரும் எந்தச் சூழலிலும் ஒரு மாசற்ற மனிதரை அழிக்கும் உரிமையைத் தாமே நேரடியாகக் கோர முடியாது.''

வாழ்வின் புனிதத்துக்கான இக்கொள்கை அடிப்படையில், ஒவ்வொரு மனிதரும் மதிப்புள்ளவர் என்று நாம் கருத வேண்டும். மக்கள், தங்களது உள்ளார்ந்த மாண்பின் காரணமாக, பொருட்களை விட மிக முக்கியமானவர்கள். மற்ற மனிதர்களின் வாழ்வு மற்றும் மாண்பை நாம் அச்சுறுத்துகிறோமா அல்லது ஊக்குவிக்கிறோமா என்பதைப் பொருத்து நமது அறநெறி வாழ்வை அளவிட முடியும்.

எல்லா மக்களின் உரிமைகளும் பாதுகாக்கப்பட்டால் மட்டுமே, மனிதர்களின் மாண்பைப் பாதுகாக்க முடியும், ஒரு நலமான மனித குழுமமாக இருக்க முடியும், மேலும் எல்லா மனிதரையும் பாதுகாப்பதற்கான தமது கடமைகளை நிறைவேற்ற ஒவ்வொருவரும் சிறந்ததைச் செய்ய வேண்டும். ஒரு மனிதருக்கு தங்குவதற்கான ஓர் இடம், உடுத்துவதற்கான ஆடை, மற்றும் பிழைப்பதற்கான உணவும் நீரும் தேவைப்படுகின்றன. ஒவ்வொரு நபரும் வாழ்வதற்கு அடிப்படை உரிமையும், மதிப்புக்குரிய வாழ்வு வாழ்வதற்கு அவசியமானவற்றைப் பெற்றிருக்க

உரிமையும் கொண்டுள்ளார். கத்தோலிக்கர்கள் என்ற முறையில், நாம் மற்ற மனிதர்களிடம் கடமைகளும் பொறுப்புகளும் கொண்டுள்ளவர்களாக நம்மைக் காண வேண்டும்.

7. ஆனால் கடவுளின் படைப்பின் இருத்தலுக்கான உரிமைகளைப் பாதுகாத்தல் குறித்த தனிச்சிறப்பான விடயத்திற்கு வரும்போது, மனிதர்கள் மட்டுமே முக்கியமானவர்கள் அல்லர். மற்றொரு மட்டத்தில், மனிதர்கள் என்ற முறையில் நாம் கடவுளின் எல்லா படைப்பின் மீதும் அக்கறை செலுத்த அவரால் அழைக்கப்பட்டுள்ளோம் (தொநூ 1:26). கடவுளின் படைப்பு முழுவதற்குமான அவரது திட்டத்தை மதிப்பதன் வழியாக, பொறுப்பாளர் நிலையைச் செயலாக்கும் பொறுப்பு எல்லா மனிதர்களுக்கும் கடவுளால் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தொடர்ச்சியாக, நாம் மனிதர்களை மட்டுமின்றி, விலங்குகள், தாவரங்கள், இயற்கை மற்றும் இயற்கை வளங்களையும், சுரண்டாமலும் முறைகேடாகப் பயன்படுத்தாமலும், பாதுகாக்க வேண்டும்.

மனிதர்களின் தேவைகளுக்குச் சமமாக அல்லது மேலாக இயற்கையின் தேவைகளை வைக்க வேண்டும் என்பது இதன் பொருளன்று. பேராசை மனப்போக்கில் இயற்கையைப் பயன்படுத்தக் கூடாது, நமக்கு தேவையானதை மட்டுமே இயற்கையிடம் இருந்து நாம் எடுக்க வேண்டும் என்பதே இதன் பொருள். மனிதகுலத்தை விட இயற்கைக்கு அதிக மாண்பு கொண்டுள்ளதாக நாம் உயர்த்தவில்லை. திருத்தந்தை 16ம் பெனடிக்ட் 2011 ஜூனில் திருப்பீடத்திற்கான புதிய தூதர்களிடம் பேசுகையில் இதைத் தெளிவுபடுத்தியுள்ளார்: ''மனிதருக்கும் சூழ்நிலைக்கும் இடையிலான உறவுநிலை குறித்த சரியானப் புரிதல் இயற்கையை முழுமையாக்கல் அல்லது அதை மனிதரை விட முக்கியமானதாகக் கருதுவதில் முடிவுக்கு வராது.''

ஆனால் அதே நேரம், படைப்புக்கு நாம் வழங்கும் அக்கறையானது பூமி கோளத்தில் வாழ்கிறவர்கள் மீது ஓர் உடனடியான மற்றும் நீண்டகாலத் தாக்கத்தைக் கொண்டுள்ளது. இயற்கை மீதான எல்லா மனிதச் செயல்களும் சாதகமான அல்லது வலிமிகு விளைவுகளை ஏற்படுத்தும். ஆகவே, இந்த தலைமுறை மற்றும் வரவிருக்கும் தலைமுறைகளின் மற்ற மனிதர்கள் மீது நாம் அக்கறை கொண்டிருந்தால், இயற்கை மீதான பொறுப்புணர்வை நாம் எப்படி செயலாக்குகிறோம் என்பதில் நாம் பொறுப்போடு இருக்க வேண்டும்.

8. **உறவுநிலைகளில் நம்பகம்**. மனிதர்கள் என்ற முறையில், நாம் அனைவரும் பெரிய மனிதக் குடும்பத்தின் ஒரு பகுதியாக வாழ்கிறோம். ஆகவே நாம் முழு மனிதக் குடும்பத்திற்கு தீங்கைக் கொணராமல், அதன் பொதுவான நலனுக்காகப் பணியாற்றும் விதத்தில் வாழ்ந்திட வேண்டும். இதற்கு ''பணிவிடை பெற அன்றி, பணிவிடை புரிய'' (மத் 20:28, மாற் 10:45) வந்த கிறிஸ்துவைப் போன்று நாம் இருப்பது தேவையாகிறது. கிறிஸ்து மனிதகுலத்திற்கு நம்பகம் உள்ளவராக இருந்தது போன்று, அவர் வந்து இறந்த இந்த மனிதகுலத்திற்கு நாமும் நம்பகம் உள்ளவர்களாக இருக்க வேண்டும்.

9. உறவுநிலைகளில் உள்ள அத்தகைய நம்பகம், மற்ற மனிதர்களுடன் நாம் நட்புறவு கொள்ளும் விதத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும். நாம் மற்ற மக்களை மதிக்கும் விதத்தில் உண்மையான நட்புறவு கொண்டால், அவர்களுடனான நமது நட்புறவு கற்புள்ளதாக இருக்க வேண்டும். கத்தோலிக்கத் திருச்சபையின் வழியில் நாம் கற்பைக் குறித்து புரிந்துகொள்ளக் கற்கும் பொழுது, மற்றவரின் மாண்பு மதிக்கப்படும் விதத்தில் எவ்வாறு சரியான பாலுறவு கொள்வது என்பதைப் புரிந்துகொள்கிறோம்.

*கதிம 2347*: ''*அடுத்திருக்கும் ஒருவருடனான நட்புறவில்* குறிப்பாகக் கற்பு வெளிப்படுகிறது. அது ஒரே அல்லது எதிர் பாலின நபர்களுக்கு இடையே உருவானாலும், நட்புறவு எல்லாருக்கும் பெரும் நன்மையாக உள்ளது. அது ஆன்மிக ஒன்றிப்புக்கு இட்டுச் செல்கிறது.''

10. உறவுநிலைகளில் உள்ள நம்பகத்தன்மை திருமணம் மற்றும் குடும்பச் சூழமைவுகளிலும் முக்கியமானது. திருமணம் என்பது இரண்டு தனிநபர்களின் தனிப்பட்ட விடயம் இல்லை என கத்தோலிக்கத் திருச்சபை கற்பிக்கிறது. திருமணம் என்பது குடும்பத்தின் அடித்தளமாக இருக்கிறது, மேலும் இந்தச் சூழமைவில்தான் குழந்தைகள் சமூகத்தில் முழுமையாகப் பங்கேற்க இயலுமாறு அவர்களுக்கு உதவும் மதிப்பீடுகளைக் கற்றுக் கொள்வர் (கதிம 1663, 2225, 2363). ஆகவே, அறநெறி வாழ்வை வாழ வேண்டுமெனில் ''விருப்பத்திற்கேற்ப எவ்விதத்திலும் உருவாக்க அல்லது மாற்ற முடிந்த வெறும் உணர்ச்சியை நிறைவுசெய்யும் ஒரு வடிவமாக'' (*எவாஞ்செலீ கவ்தியும்*, 66) திருமணத்தைப் புரிந்துகொள்ள முடியாது.

11. ஆகவே, தனிநபர், குடும்பம், மற்றும் முழு சமூகத்தின் நலனுக்காக, எல்லா மக்களின் பொது நன்மை மற்றும் நலத்திற்கு ஒன்றிணைந்து உழைக்க சமூகத்தில் பங்கேற்கும் உரிமை மற்றும் கடமையை எல்லா மனிதர்களும் கொண்டுள்ளனர். இந்த உந்துணர்வோடு, முன்னேற இயலாத, ஏழைகள் மற்றும் வலுவற்றோர் போன்றவர்களின் தேவைகளில், அதிக கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

மனித சமூகம் அதன் பொருளாதாரம், ஆட்சியமைப்பு, மற்றும் சட்டங்களில் ஒருங்கமைக்கப்பட வேண்டிய தேவையுள்ளது, அதனால் இந்த சமூகத்தில் ஒவ்வொரு நபரின் மனித மாண்பு பாதுகாக்கப்பட்டு, மனித சமூகத்தில் ஒவ்வொரு தனிநபரும் செழுமையும் முன்னேற்றமும் அடையத் தகுதி பெறுவர்.

12. **பொது நன்மை**. மனிதக் குடும்பத்தில் நமது சகோதர சகோதரிகள் யாராக எங்கே இருந்தாலும் நாம் எல்லாரும் அவர்களின் காப்பாளர்கள், என்று கத்தோலிக்கத் திருச்சபையின் சமூகப் படிப்பினை தெரிவிக்கிறது. நீதியான முறையில் வளங்கள் பகிரப்பட வேண்டும் என்பதே இதன் பொருள், அதனால் ஒவ்வொருவரின் அடிப்படைத் தேவைகள் சந்திக்கப்படும். இத்தகைய வளங்கள் அல்லது பொருட்கள் என்பவை உடல் சார்ந்தவற்றுக்கு மட்டுமின்றி, ஆன்மிகம் சார்ந்தவற்றுக்கும் பொருந்தும்.

தல மட்டத்திலான மனிதர்கள் குறித்து மட்டுமின்றி, தேசிய மற்றும் உலக அளவிலும் நாம் அக்கறை கொள்ள வேண்டும். அறிவியல், தொடர்புகள், மற்றும் நவீன போக்குவரத்தின் வளர்ச்சியால் உலகம் அதிக சார்பில்லாதது ஆகியுள்ளதால் இது சிறப்பாக உண்மையாகும். மனித தேவைக்கு தூய கத்தோலிக்கத் திருச்சபையின் சமூகப் படிப்பினைக்கு ஏற்ப எவ்வாறு பதிலிறுப்பது என்பதை நாம் கற்க வேண்டியுள்ளது.

13. சமூகத்தின் அறநெறியை அதன் மிக வலுவற்ற உறுப்பினர்கள் மீது எவ்வளவு நன்றாக அக்கறை காட்டப்படுகிறது என்ற அடிப்படையில் கவனிக்கலாம். பேராசையால் இயக்கப்படுகிற, செல்வந்தர் மற்றும் ஏழைக்கு இடையே ஆழ்ந்த பிரிவுள்ள ஓர் உலகில், ஏழைகள் மற்றும் வலுவற்றோரின் தேவைகளுக்கு முன்னுரிமை அளிக்குமாறு திருச்சபை கற்பிக்கிறது.

“ஏழைகளுக்கான திருச்சபையின் அன்பு ... அதன் நிலையான மரபின் ஒரு பகுதியாக இருக்கிறது. பேறுகளின் நற்செய்தி, இயேசுவின் ஏழ்மை, மற்றும் ஏழைகளுக்கான அவரது அக்கறையால் இந்த அன்பு தூண்டுதல் பெற்றுள்ளது” (*செந்தெசிமூஸ் ஆனுஸ்*, 57).

14. இந்த உலகில், வாழ்வதற்காக மக்கள் உழைக்க வேண்டியுள்ளது. ஆனால் தங்கள் ஊதியத்தை ஈட்டப் பணத்தை உருவாக்குவது என்பதை விட, உழைப்பு என்பது கடவுளின் படைப்பில் நமது தொடர் பங்களிப்பின் வடிவமாக இருக்கிறது. இதன் காரணமாக, உழைப்பின் மாண்பு பாதுகாக்கப்பட வேண்டும், மேலும் எல்லா உழைப்பாளர்களின் அடிப்படை உரிமைகள் மதிக்கப்பட வேண்டும். சரியான ஊதியம் பெறுவதற்கு, தங்களது உரிமைகளைப் பாதுகாக்க தங்களை ஒருங்கமைத்துக் கொள்வதற்கு அவர்கள் உரிமை கொண்டுள்ளனர் என்பதே இதன் பொருள், மேலும் தங்களது அடிப்படைத் தேவைகளைச் சந்திக்க சொந்தமாகத் தனியார் உடைமைகளைக் கொண்டிருக்கவும் உரிமை கொண்டுள்ளனர்.

15. வரவிருக்கும் பாடங்களில், கத்தோலிக்கத் திருச்சபையின் அறநெறி படிப்பினைகளில் அவசியமான எல்லா அம்சங்களையும் பார்க்க இயலாது. எனினும், சில மிக அடிப்படையான, இந்த அறநெறி கொள்கைகளில் இருந்து வருகின்ற அம்சங்களை இந்த பாடத்தில் நாம் அறிமுகம் செய்துள்ளோம்.

16. மேற்கண்ட கொள்கைகள் மிகுந்த சீர்மை சார்ந்தவை, இந்த வீழ்ச்சியுற்ற உலகில் இத்தகைய சீர்மைகளை நேர்த்தியாகக் கடைபிடிப்பது எந்த மனிதருக்கும் (கத்தோலிக்கர் அல்லது மற்றவர்) சாத்தியமா என்று நாம் வியப்புறலாம்.

கத்தோலிக்க விசுவாசம் எப்பொழுதும் நேர்த்தியின் சீர்மையை நமக்கு வழங்குகிறது, இதற்கு எளிய காரணம் கடவுள் நேர்த்தியானவராக (நிறைவானவராக) இருக்கிறார் (திபா 18:30). அவ்விதமாகவே, இயேசு கூறுகிறார், “உங்கள் விண்ணகத் தந்தை நிறைவுள்ளவராக இருக்கிறது போல, நீங்களும் நிறைவுள்ளவர்களாக இருங்கள்” (மத் 5:48). இயேசு இந்தக் கோரிக்கையை விடுப்பதில், இத்தகையத் தேவை சாத்தியமற்றது அன்று என பொருளாகிறது. மனிதர்கள் நன்மைத்தனத்துடன் படைக்கப்பட்டுள்ளனர் (தொநூ 1:31), ஏனெனில் ஆணும்

பெண்ணும் கடவுளின் உருவிலும் சாயலிலும் படைக்கப்பட்டுள்ளனர் (தொநூ 1:26-27). மனிதர் நல்லவராக இருக்கவும், நன்மை செய்யவும், மற்றவருக்கு வாழ்வு கொடுக்கவும் திறன் கொண்டுள்ளார் என்பதே இதன் பொருள்.

உண்மையில், மனிதகுலம் வீழ்ச்சியுற்ற உண்மையை இது தவிர்க்கவில்லை. மனிதர்கள் ஒருவர் மற்றவருக்கும் மற்றும் படைப்புக்கும் வருத்தமளிக்கும் விடயங்களைச் செய்கின்றனர் என்பது உண்மை. மனிதர்கள் பிற மனிதர்கள் மற்றும் படைப்பின் மாண்பைக் கெடுக்கின்றனர் என்பது மெய்மை. நாம் இருக்க வேண்டிய மற்றும் செய்ய வேண்டிய நன்மையில் இருந்து எளிதாக நெறிதவறிச் செல்கிறோம். நாம் எளிதாக தன்னலமும் தன்மையமும் கொண்டவர்கள் ஆகிவிடுகிறோம். நம்மையும் நமது பாவ நிலையையும் குறித்த உண்மையை மனிதகுல வரலாறு நமக்கு கூறுகிறது.

இதன் காரணமாகவே கடவுள், நமது மீட்பர், இயேசு கிறிஸ்து என்ற நபரில், நமது பாவநிலையை ஒப்புக்கொள்ளவும், தவறு செய்வதற்கு எதிராக நமது இதயங்களை நிலை நிறுத்தவும், நம்மீதான பாவத்தின் ஆற்றலை முறிக்கப் போராடவும் நம்மை அழைக்கிறார். நமது வாழ்விலும் இந்த உலகிலும் பாவத்திற்கு எதிராகப் போராடுவது திருச்சபையின் அறநெறி படிப்பினைகளின் பண்பாக இருக்கிறது. கிறிஸ்துவில் புதிய மனிதராகுமாறு நமது பழைய இயல்பைக் களையும்படி புனித பவுல் நம்மை ஊக்குவிக்கிறார் (எபே 4:17-24). நாம் கொண்டுள்ளதை விடவும், நல்லவராக இருப்பதிலும் நன்மை செய்வதிலும் (அதாவது, தூயவர் ஆவதற்கு) நமது திறனைப் பயன்படுத்த கடினமாக உழைக்குமாறு திருச்சபையின் அறநெறி படிப்பினைகள் நமக்கு கட்டளையிடுகின்றன. பாவத்தை நமக்கு விருப்பமற்றதாக மாற்றவே திருச்சபையின் அறநெறி படிப்பினைகள் இருக்கின்றன.

இவை எல்லாம் சாத்தியமே, ஏனெனில் நாம் தனியாகப் போராடவில்லை. இயேசு நமது வாழ்வில் இருக்கிறார். அவர் ஏற்கெனவே தமது திருத்தூதர்களுக்கும் தம்மைப் பின்பற்றும் எல்லாருக்கும் வாக்களித்துள்ளார், “நான் எப்பொழுதும் உங்களோடு இருக்கிறேன்; ஆம், காலத்தின் முடிவு வரை” (மத் 28:20). தூய ஆவியாரின் வழியாக அவர் நம்மோடும் நமக்குள்ளும் இருந்து, தூய வாழ்வு வாழ நம்மை இயன்றோராக்கி ஆற்றல்படுத்துகிறார். வெறுமனே விதிக்கு கீழ்ப்படிதல் அல்லது கடவுளின் சட்டங்களை மீறாமல் நடத்தல் மட்டுமே அறநெறி வாழ்வை வாழ்வதாகாது, ஆனால் கடவுளுடனான தொடர்ந்த உறவுநிலையிலும் தூய ஆவியாருக்கு கீழ்ப்படிந்து இருத்தலுமே அவ்வாறு வாழ்வதாகும், அதனால் அவர் நமது வழிகாட்டி, நமது பாதுகாப்பாளர், மற்றும் நமது சிந்தனைகள், செயல்கள் எல்லாவற்றிலும் நமது வலிமையாக இருக்க முடியும்.